**செய்தி வெளியீடு எண்: 814** **நாள்: 18.06.2024**

**மாண்புமிகு இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவிட போக்ஸோ இணைய முகப்பு, தனி நபர் பராமரிப்பு திட்ட செயலி (Individual Care Plan Application), குழந்தை பராமரிப்பு இல்லங்களை ஆய்வு செய்வதற்கான செயலி(Inspection and Monitoring Application), கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியத்தின் உறுப்பினர் சேர்க்கைக்கான கைபேசி செயலி ஆகியவற்றை துவக்கி வைத்தார்.**

குழந்தைகள் நலனில் எப்போதுமே, அக்கறை கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், குறிப்பாக பெண் குழந்தைகள் மாநிலத்தில் பாதுகாப்பாக வளர்ந்து, ஆற்றல் பெற்று தன்னிறைவு அடைய, பல்வேறு முன்னோடி திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அவ்வகையில், பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகள் பாதுகாக்கவும், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் உடனடியாக வழங்கிடவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதன் தொடர்ச்சியாக மாண்புமிகு இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் போக்சோ சட்டத்தினை அமல்படுத்துதல் தொடர்பாக நடந்த ஆய்வுக் கூட்டத்தில் போக்சோவுக்கென தனி இணையதளம் உருவாக்கப்படவேண்டும் என அறிவுறுத்தினார்கள்.

மாண்புமிகு இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (18.06.2024) சென்னை முகாம் அலுவலகத்தில், போக்சோ இணையதளம் https://www.pocsoportal.tn.gov.in தனி நபர் பராமரிப்பு திட்ட செயலியையும் (Individual Care Plan Application) குழந்தை பராமரிப்பு இல்லங்களை ஆய்வு செய்வதற்கான

செயலியையும் (Inspection and Monitoring Application), கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியத்தின் உறுப்பினர் சேர்க்கைக்கான கைபேசி செயலியையும் துவக்கி வைத்தார்கள்.

**போக்சோ இணைய முகப்பு (POCSO PORTAL) :–**

போக்சோ இணையதள முகப்பு (POCSO PORTAL) மூலம், பாலியல் குற்றங்களில் பாதிக்கப்பட்ட குழந்தைகள் தொடர்பான வழக்குகளை காவல் துறை, போக்சோ நீதிமன்றம் / மகளிர் நீதிமன்றம் மற்றும் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை ஆகிய துறைகள், விவரங்களை உடனுக்குடன் பதிவு செய்யவும், பாலியல் குற்றங்களில் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் வழக்குகள் காவல் துறையால் பதிவு செய்யப்படுவது முதல், நீதிமன்ற இறுதி தீர்ப்பு வரையும், ஒவ்வொரு நடவடிக்கையையும் அத்துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கண்காணித்து வழக்கினை விரைவுபடுத்த இயலும்.

மேலும், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான இழப்பீட்டு தொகையினை தாமதமின்றி, எவரையும் அணுகாமல், இணையதளம் மூலமாக நேரடியாக அவர்களின் வங்கி கணக்கிற்கு செலுத்தவும், துறை சார்ந்த உயர் அலுவலர்களால் வழக்கு துரிதமாக தீர்வு செய்வதை கண்காணிப்பதற்கும் இவ்விணைய தளம் பயனுள்ளதாக அமையும். **குழந்தை தொடர்பான விவரங்கள் எவருக்கும் தெரியாத வண்ணம் இவ்விணைய தளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.**

**தனி நபர் பராமரிப்பு திட்ட செயலி :– (Individual Care Plan Application)**

தற்போதுள்ள நடைமுறையின்படி தமிழ்நாட்டில் உள்ள குழந்தைகள் இல்லங்களில் உள்ள குழந்தைகளுக்கான தனி நபர் பராமரிப்பு திட்டம் (Individual

Care Plan) மூலம், ஒவ்வொரு குழந்தையும் குழந்தைகள் இல்லங்களில் சேர்ப்பதிலிருந்து, அவர்களின் ஆரோக்கியம், மனநலன், கல்வி முன்னேற்றம் போன்ற குழந்தைகள் தொடர்பான அனைத்து முக்கிய விவரங்கள் தனி நபர் கோப்புகளில் பராமரிக்கப்படுகின்றன. இதனைத் தவிர்த்து, நிகழ் நேர கண்காணிப்பு (Real time monitoring) செய்வதற்கு ஏதுவாக தொழிற்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு, அனைத்து குழந்தைகளின் பல்வேறு குறியீடுகளை தொடர்ந்து கண்காணிக்க (continuous monitoring) இச்செயலி பயனுள்ளதாக அமையும்.

**ஆய்வு மற்றும் கண்காணிப்பு செயலி (Inspection and Monitoring application) :–**

குழந்தைகள் நலனை உறுதிபடுத்த தமிழ்நாட்டில் உள்ள அனைத்து இல்லங்களையும் ஆய்வு செய்வது அத்தியாவசியமாகும். அது சரியாக நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதை உறுதிபடுத்த ஆய்வு செய்யும் அலுவலர்களின் ஆய்வு நேரம், இடம், நிறுவன விவரங்கள் உள்ளிட்ட அனைத்து தரவுகளும் உடனுக்குடன் பெறுமாறு ஆய்வு மற்றும் கண்காணிப்பு செயலி (Inspection and Monitoring application) வடிவமைக்கப்பட்டுள்ளது. இச்செயலி புவியியல் குறியிடல் (Geographical tagging) வசதியுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியத்தின் உறுப்பினர் சேர்க்கைக்கான கைபேசி செயலி :–**

தமிழ்நாட்டின் கிராமங்கள் மற்றும் நகர்ப்புரங்களில் வாழும் ஏழை, எளிய கைம்பெண்கள், ஆதரவற்ற பெண்கள் மற்றும் பேரிளம்பெண்கள் தங்களுக்கு தேவையான உதவிகளை அரசிடமிருந்து எளியமுறையில் பெற, அவர்களுக்கு

அருகில் உள்ள இ–சேவை மையங்களில், www.tnwidowwelfareboard.tn.gov.in என்ற இணையதளத்தில் தங்களின் விவரங்களை பதிவு செய்து, கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியத்தில் உறுப்பினராகலாம். இந்த வலைபயன்பாட்டின் (Web Application) வாயிலாக அவர்களுக்குத் தேவைப்படும் உதவிகளான சமூக நலத் துறையின் திட்டங்கள், ஓய்வூதியம், தற்காலிக தங்கும் இடம், திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் சுய தொழில் செய்ய மானியம் போன்ற உதவிகளை தேவைகளை விரைந்து பெற்றிட, இவ்வாரியத்தின் மூலம் தமிழ்நாடு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர், திருமதி.கீதா ஜீவன் அவர்கள், செயலர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன்,இ.ஆ.ப., அவர்கள், சமூக நலத் துறை ஆணையர், திருமதி வே. அமுதவல்லி இ.ஆ.ப., மற்றும் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை, இயக்குநர் திரு. அமர் குஷ்வாஹா இ.ஆ.ப., மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் துறை இயக்குநர் திருமதி ஜெ.யு. சந்திரகலா, இ.ஆ.ப. உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu